# புகழ்ச்சிக்கூட்ட நற்செய்தி

2018 ஆடி மாதம் 30ம் திகதி முதல் ஆவணி மாதம் 04ம் திகதி வரை

## *''நம்பிக்கை கொள்பவன் வழியாக ஜீவ நீர்ஊற்று வழிந்தோடும்''*

01. ஆரம்பப் புகழ்ச்சிக்காக :புபுது பாடல் இல. 05 ''ஞானம் வீரம்........''

02. புகழ்ச்சிகான அறிமுகம் :

- ''எனவே வானங்களை கடந்து சென்ற இறைமகனாகிய இயேசுவை நாம் தனிப்பெரும் தலைமைக் குருவாகக் கொண்டுள்ளதால் நாம் அறிக்கையிடுவதை விடாது பற்றிக்கொள்வோமாக. ஏனெனில் நம் தலைமைக் குரு நம்முடைய வலுவின்மையைக் கண்டு இரக்கம் காட்ட இயலாதவர் அல்ல. மாறாக எல்லாவகையிலும் நம்மைப் போலச் சோதிக்கப்பட்டவர் எனினும் பாவம் செய்யாதவர்''(எபிரேயர் 4:14-15)
- இயேசு கிறிஸ்துநாதரை வாழ்வின் ஒரே ஆண்டவராக்கிக் கொண்ட நாம் பெற்றிருக்கின்ற ஆசீர்வாதம் எத்தகைய வல்லமை வாய்ந்தது. எமது பெலயீனங்களை குறித்து கருணையுடன் எம்மை நோக்குகின்ற, எல்லா விதத்திலும் எம்மை போன்று சோதனைகளுக்கு முகம் கொடுத்த இறைஆண்டவரை எனது வாழ்வில் ஆண்டவராக்கிக் கொள்ளும் அளவிற்கு நான் எத்தகைய பேறுபெற்றவனாக இருக்க வேண்டும். எமக்கு உரிமையாகி இருக்கின்ற இறைபுத்திரத்தன்மை மீது நிலைத்திருந்து இன்றைய புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம்.
- புபுது பாடல் இல. 150 ''நீர் இன்றி....''

03..மீளப் பார்த்தல்

- கடந்த 04 வாரங்களும் உங்களுக்கு கிடைத்த நற்செய்தினுள் வாழ்வதற்கு முடியுமாக இருந்ததா? அருகில் இருக்கும் ஒருவருடன் பகிர்ந்துக் கொள்ளுங்கள்.
  - முதலாம் வாரம் : இறைவார்த்தையை கேட்டு கடைபிடிப்பதின் இறுதி எதிர்பார்ப்பு ஆசீர்வாதத்தை அனுபவிப்பதாகும்.
  - இரண்டாம் வாரம் : செப வாழ்வினுள் இறைவிருப்பத்தை நிறைவேற்ற தாகம் கொள்வோம்.
  - மூன்றாம் வாரம். : பற்றி எரிந்தவாறு பற்றி எரியசெய்கின்ற பரிசுத்த அக்கினி.
  - நான்காம் வாரம் : அணைக்க முடியாத பரிசுத்த அக்கினியினால் பற்றிஎரிந்த வாழ்வின் வழியாக பிரகாசிக்கின்ற ஒலி.

04.நாளுக்குரிய நற்செய்தி

புனித யோவான் 5: 24-27 –பொதுவாக வாசிக்கவும்.

புனித யோவான் 5:24 –''என் வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பியவரை நம்புவோர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளனர் அவர்கள் தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டார்கள் ஏற்கனவே சாவைக் கடந்து வாழ்வுக்கு வந்துவிட்டார்கள்''

புனித யோவான் 5:25 –‘‘அதைக் கேட்போர் வாழ்வர்’’

புனித யோவான் 5:26 –‘‘தந்தை தாம் வாழ்வின் ஊற்றாய் இருப்பது போல மகனும் வாழ்வின் ஊற்றாய் இருக்கமாறு செய்துள்ளார்’’

05. வார்த்தையின் ஊழியருக்காக :

- இறைவனுடைய வார்த்தையை கேட்டு அதில் நம்பிக்கையுடன் வாழ்ந்த கிறிஸ்துநாதருக்கு தந்தையானவர் அளித்த ஆசீர்வாதம் ஜீவனுடனான வல்லமையுடன் இருப்பதற்கான வரமாகும்.
- இறைவனுடைய வல்லமையை அனுபவிக்கின்ற புபுது மக்கள் என்ற வகையில் நாம் வந்த பயணத்தில் இறைவனுடைய வார்த்தையை விசுவசிப்பதற்கு நாம் பெற்றிருக்கின்ற ஆசீர்வாதத்தை, அனுக்கிரகத்தை வார்த்தைகளினால் சொல்லி முடிவு செய்ய முடியாத அளவாகும். முனித பலயீனங்கள், குறைபாடுகள், பாவமான நிலைகள், வழியாக மனம்வருந்தியவாறு இறைவனது அன்பின் பால் திரும்புவதற்கு இறைவார்த்தை எமக்கு வழிகாட்டி உள்ளன.
- இறைவனது வார்த்தைக்கு செவிமடுப்பதற்கு, உளம் திறப்பதற்கு அதனுள் வாழ்வதற்கு பரிசுத்த ஆவியானவர் எம்மில் பற்றி எரிய செய்கின்ற அக்கினி சோதனைகளிலிருந்து எம்மை காபாற்றும். தீர்ப்பிலிருந்து எம்மை மீட்டெடுக்கும்.
- வாழ்க்கை பிரச்சனைகள், நோய் துன்பங்களினுள் இறைவார்த்தையை தேடுவதற்கு பரிசுத்த ஆவியானவர் எம்முள் பற்றியெரியச் செய்கின்ற அக்கினி விடுதலையை, மீட்பை, சுகத்தை எமக்கு அனுபவிப்பதற்கு வரம் கிடைக்கும்.

06. செயல்பாடு :

- இறைவனுடைய வார்த்தையில் நம்பிக்கையுடன் வாழ்வதன் வழியாக பெற்ற ஆசீர்வாதமான அனுபவங்களை பகிர்ந்து கொண்டவாறு சாட்சி பகர்வோம்.

07. இறுதி செபம்.–.

புபுது பாடல் இல. 54 ‘‘சீவியத்தின் தேவனே…’’